நெற்பயிரைத் தாக்கும் மாவுப் பூச்சி (பிரவேனியா ரெகி) மற்றும் கட்டுப்படுத்தும் முறைகள்

**பூச்சி பரவும் இடங்கள்** : இந்தியாவில் தமிழ்நாடு, ஆந்திர பிரதேசம், கர்நாடகம், ஒரிசா, மத்திய பிரதேசம், மேற்கு வங்காளம் மற்றும் கேரளா, வங்காளம் மற்றும் தாய்லாந்து.

**ஆதார உயரி** : நெல் மற்றும் அதன் களைகள்

**சேத அறிகுறிகள்** :

அதிக எண்ணிக்கையிலான பூச்சிகள் இலையுறைக்குள் தங்கிக் கொண்டு சாற்றை உறிஞ்சுவதால் இலையுறைகளில் வெள்ளைநிற மெழுகு போலக் காணப்படும்.

பூச்சித் தாக்கப்பட்ட வயல்களில் பயிர்கள் வளர்ச்சி குன்றி, நோய் தாக்கப்பட்ட பயிர்களைப் போன்று தனிப்பட்ட பத்தைகளாகக் காணப்படும்.

**பூச்சியின் அடையாளம்** :

வெளிரிய சிகப்பு நிறத்தில் மென்மையான உடலுடன், இறக்கைகள் இல்லாமல் காணப்படும்.

ஒரு முதிர்ச்சி அடைந்த மாவுப்பூச்சி ஒரு முறைக்கு 126 முதல் 139 இளம் பூச்சிகள் வரை இலையுரையினுள் வெளியிடும்.

**கட்டுப்படுத்தும் முறை** :

1. வரப்புகளிலிருந்து புல் வகைக் களைகளை அகற்றி வரப்புகளை சீர் செய்ய வேண்டும்.
2. பூச்சி தாக்கப்பட்ட செடிகளை அகற்றி அழித்தல் வேண்டும்.
3. ஃபியூப்ரோபெசின்(25 Sc) என்ற தோல் உரித்தடுப்பானை ஏக்கருக்கு 200மில்லி என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம். (அல்லது)
4. தயாமித்தாக்ஸாம் என்ற பூச்சிக் கொல்லியினை(20 WDG) 1 ஏக்கருக்கு 100 கிராம் என்ற அளவில் 200 லிட்டா தண்ணீரில் கலந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம். (அல்லது)
5. டைமித்தோயிட்(30EC) 400 மில்லி மருந்துடன் 200 மில்லி அசாடிராக்டின் (10000 PPM) கலந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம்

## மாவுப்பூச்சியின் அறிகுறிகள்



**இலையுறைக்குள் வெண் நிற மெல்லிய இளம் குஞ்சுகள் மற்றும் முதிர் பூச்சிகள்**




**நோய் தாக்கப்பட்ட பயிர்கள்**